**நாள்: 24.07.2026**

O.S.No.254/2023

DW1. பெயர்: சௌந்திரபாண்டியன்

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**குறுக்கு விசாரணை**

1. வாதியும், நானும் பக்கத்து, பக்கத்து ஊர் என்று சொன்னால் சரியல்ல. என்னை சௌந்திரபாண்டியன் என்றும் சௌந்திரராஜன் என்றும் இரண்டு பெயர்களில் அழைப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல, சௌந்திரபாண்டியன் என்று தான் அழைப்பார்கள். தனலட்சுமி என்பவர் எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவியை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் எதிர்வழக்குறையில் குறிப்பிட்டுள்ள MSR பைனான்ஸ் என்ற நிறுவனம் எங்குள்ளதென்றால் அது ஆண்டிபட்டியில் உள்ளது. MSR பைனான்ஸ் சம்பந்தப்பட்ட நபர்களை நான் சாட்சியாக விசாரிக்க தயராக உள்ளேனா என்றால் நான் சாட்சியாக விசாரிக்க தயராக உள்ளேன்.

2. நான் MSR பைனான்ஸ்–ல் 2016ம் ஆண்டிலிருந்து 2020ம் ஆண்டு வரை தொடர்பில் இருந்ததாகவும், சீட் போட்டதாகவும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் நான் எந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் MSR பைனான்ஸ் மீது புகார் கொடுத்ததாக எதிர்வழக்குரையில் குறிப்பிடவுமில்லை அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் MSR பைனான்ஸ்–க்கு காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அதன் தேதி, வங்கி விபரம், தொகை பற்றிய விபரங்களை நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

3. நான் குறிப்பிட்டது போல் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கடனுறுதி சீட்டை நான் பார்த்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பிய பிறகு தான் நான் அந்த கடனுறுதி சீட்டை பார்த்தேன். மேற்கண்ட கடனுறுதி சீட்டை யார் எழுதினார்கள், யார் சாட்சி கையொப்பம் போட்டனர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கடனுறுதி சீட்டை பார்க்கமால் யூகத்தின் அடிப்படையில் அதன் சரத்துக்கள், எழுத்துக்கள், எழுதிய நபர்கள் குறித்து எதிர்வழக்குறையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குறையில் பத்தி–8ல் கடனுறுதி சீட்டின் சரத்துக்கள் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டதென சொல்லியுள்ள விபரத்திற்கு நான் நிபுணர் அறிக்கையோ, சோதனைக்கோ, நடவடிக்கையோ மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டு முறையாக எழுதப்பட்டுள்ளதென்றும், நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் வாதியின் மீது கடனுறுதி சீட்டை தவறாக பயன்படுத்தியதாக கூறி புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் அவ்வாறு புகார் ஏதும் கொடுக்கவில்லை. கடனுறுதி சீட்டில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் நான் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். கடனுறுதி சீட்டின் அடிப்படையில் ரூ.1வட்டி கணக்கீட்டு வாதி வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் தெரிந்து கொண்டேன்.

5. பொதுவாக பதிவு பெற்ற பைனான்ஸ் நடத்தும் சீட்டு கம்பெனியில் சொத்துக்களை கிரைய ஒப்பந்தமாக எழுதி தரமாட்டார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்திலும், பி.வா.சா.ஆ.2 ரத்து

ஆவணத்திலும் நானும், வாதியும் தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆண்டிபட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற CC No.40/2021 காசோலை வழக்கானது எனது மனைவிக்கும், அசோக்குமாருக்குமான வழக்கு என்றும், அதற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் வாக்குமூலமாக நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணமானது இந்த வழக்கிற்கு தொடர்பற்றதென்றும், சட்டப்படி ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

6. வாதி வழக்கு தாக்கல் செய்த போது எத்தனை மாதம் வட்டி கோரியிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு வாதி யாரென்றே தெரியாது. MSR பைனான்ஸ்–க்கும், வாதிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாதென்று சொன்னால் சரியல்ல. அவர்கள் இருவரும் ரியல் எஸ்டேட் பார்ட்னர். வா.த.சா.ஆ.1 கடனுறுதி சீட்டின் அடிப்படையில் வாதிக்கு கொடுக்கவேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து தப்பிப்பதற்காக MSR பைனான்ஸ்–ல் கொடுத்த கடனுறுதி சீட்டை இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.24 15:51:40 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.